S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் டிசம்பர் 31 * 2025 * மலர் -1 * இதழ்-213* VOL-1 * ISSUE-213 விலை ரூ.3 * பக்கம் -4

## விரைவில் அறிவிப்பு வருகிறது:

# 2.22 கோடி குடும்பத்திற்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்;

## ★ ரொக்கப்பணம் ரூ.3,000 வழங்கப்படவும் வாய்ப்பு!!

சென்னை, டிச.31

தமிழ்நாட்டில் 2.22 கோடி குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட உள்ளது. அத்துடன் ரூ.3 ஆயிரம் ரொக்கப்பணமும் வழங்கப்படும் என தெரிகிறது. இதற்கான அறிவிப்பு விரைவில் வரஉள்ளது. இந்ததிட்டத்தை முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்தொடங்கி வைப்பார். தமிழர்களின் பண்டிகையான பொங்கல் விழாவை முன்னிட்டு ரேசன் அட்டைதாரர்களுக்கு இலவசமாக பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டு வருகின்றது. அதில் பச்சரிசி, சர்க்கரை, கரும்பு மற்றும் பொங்கல் வைக்கத் தேவைப்படும் பொருட்கள் அடங்கும். சமீபத்திய வருடங்களாக பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரொக்கப்பணமும் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இலவச வேட்டி–சேலையும் வழங்கப்பட்டு வருகிறது.



2026–ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழா ஜனவரி 15–ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு இந்த ஆண்டும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரொக்கப் பணம் வழங்கப்பட இருக்கிறது.

இந்த முறை 2 கோடியே 22 லட்சம் குடும்பங்களுக்கு பரிசு வழங்கப்பட உள்ளது. இதற்காக தலா 2.23 கோடி டன் பச்சரிசியும், சர்க்கரையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதைப்போல 1.77 கோடி வேட்டியும், அதே அளவு சேலையும் நெசவாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இந்த வேட்டி– சேலைகள் விரைவில் ரேசன் கடைகளுக்கு அனுப்பப்பட உள்ளன. மேலும் கரும்புக் கட்டுகளை வாங்கவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மக்களுக்கு வீடு வீடாக டோக்கன் வழங்கப்படும். அதில் குறிப்பிட்ட தேதிப்படி அவர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகள் வழங்கப்படும்.

இந்த பரிசுத் தொகுப்பில் ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஏலக்காய், முந்திரி, திராட்சை உள்ளிட்ட சர்க்கரைப் பொங்கலுக்கான பொருட்களும் இடம் பெறும். அத்துடன் ஒரு முழு கரும்பும் வழங்கப்படும். மேலும் ரொக்கப்பணமும் வழங்கப்பட உள்ளது. தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் 2022–ஆம் ஆண்டில் பொங்கல் பரிசுத் தொகுப்பில் 20 வகை பொருட்கள் இருந்தன. அத்துடன் கரும்பும் வழங்கப்பட்டது.

2023–ஆம் ஆண்டு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு ஆகியவற்றுடன் ரூ.1,000 ரொக்கப்பணமும் வழங்கப்பட்டது.

அதைப்போல 2024–ஆம் ஆண்டிலும் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.1,000 வழங்கப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது. ரொக்கப்பணம் வழங்கப்படவில்லை. அதற்கு மாறாக இல்லத்தரசிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக மாதாமாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் முன்னரே தொடங்கப்பட்டது.

இந்த நிலையில் தான் வருகின்ற, பொங்கல் பண்டிகைக்கு பரிசுத் தொகை வழங்கப்பட இருப்பதாக கூறப்படுகிறது. ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமி கூறி வருகிறார்.

தமிழக அரசும் அதே தொகையை வழங்க பரிசீலிப்பதாக முதலில் செய்தி வெளியானது. ஆனால் நிதிநிலைக்கு ஏற்ப ரூ.3 ஆயிரம் வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக செய்தி வெளியானது. ஏற்கனவே மகளிர் உரிமைத் தொகை, மாணவ – மாணவிகளுக்கான உதவித் தொகை ஆகியவற்றையும் சேர்த்தால் ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000 வந்துவிடும்.

இந்த பொங்கல் பரிசுத் தொகுப்பு திட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெகு விரைவில் அறிவிக்க உள்ளார்.

அதையடுத்து வீடு வீடாக டோக்கன் வழங்கப்படும். கடந்த ஆண்டு ஜனவரி 10 முதல் 14–ஆம் தேதி வரை பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது. அதைப்போலவே இந்த ஆண்டும் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைப்பார்.





கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற விழாவில் 9.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் செயற்கை புல்வெளி தளத்துடன் அமைக்கப்பட்டுள்ள ஹாக்கி மைதானத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து ஹாக்கி விளையாடினார்.



கோவையில்சர்வதேசதரத்தில் அமைக்கப்பட்டஹாக்கிமைதானத்தை துணைமுதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். அருகில் அமைச்சர் ராஜகண்ணப்பன், முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி மற்றும் பலர் உள்ளனர்.



திருப்பூரில் உள்ள ஸ்ரீ கனக வள்ளி தாயார், பூமாதேவி சமேத வீரராகவ பெருமாள் கோவிலில் வைகுண்ட ஏகாதசி விழாவை முன்னிட்டு இன்று அதிகாலை சொர்க்கவாசல் திறக்கப்பட்டது.

வீரராகவ பெருமாள் ராஜஅலங்காரத்தில் கருட வாகனத்தில் பரமபத வாசல் வழியாக எழுந்தருளினார்.

## பொதுமக்கள் கையில் உள்ளாட்சி அரசு நாளிதழ்







பல்லடம் பகுதியில் நடக்கும் திமுக மகளிரணி மாநாட்டில் திருப்பூர் மாவட்ட நிருபர் பேராசிரியர் ராமன் குமார் தலைமையில் உள்ளாட்சி அரசு நாளிதழ் மாநாடு சிறப்பு மலர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. பொதுமக்கள் ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடன் வாங்கி செல்லும் புகைப்படங்கள்.

## சித்திரப்பட்டி ஸ்ரீபெருமாளப்பன் கோவிலில் சொர்க்கவாசல் திறப்பு!

### ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்!!



தருமபுரி,டிச.31

சித்திரப்பட்டியில் உள்ள ஸ்ரீபெருமாளப்பன் திருக்கோவிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது, பரமபத வாசல் வழியாக பெருமாள் பக்தர்களுக்கு காட்சி அளித்தார் .

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே சித்திரப்பட்டி கிராமத்தில் உள்ள ஸ்ரீபெருமாளப்பன் திருக்கோவிலில் வைகுன்ட.ஏகாதசியைமுன்னிட்டு சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நடைபெற்றது.

ஸ்ரீபெருமாளப்பன் பரமபதவாசல் வழியாக பக்தர்களுக்கு காட்சி அளித்தார் அப்போது அங்கு கூடியிருந்த பக்தர்கள் நாராயணா ஓம் நமோ நாராயணா என கோஷம் எழுப்பி பெருமாளை வழிபட்டனர், தொடர்ந்து கோவிலில் உள் பிரகாரத்தில் சுவாமி தங்க கவசத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்தார் தொடர்ந்து தீபாராதனை நடைபெற்றது, உற்சவ மூர்த்தி கோவிலை சுற்றி 3 முறை ஊர்வலமாக வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் லட்டு மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.



வைகுண்ட ஏகாதசி விழாவை முன்னிட்டு திருவரங்கம் ரெங்கநாதர் கோவிலில் அதிகாலை சொர்க்கவாசல் திறக்கப்பட்டது. பரமபத வாசல் வழியாக நம்பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்தை அமைச்சர் பெரியசாமி திறந்து வைத்தார்.

## ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு 570 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

சென்னை, டிச.31

ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு சென்னையில் இருந்து 570 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று தமிழக போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன் வெளியிட்ட அறிக்கை வருமாறு:– ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு டிச.30 மற்றும் 31 மற்றும் ஜன.1–ம் தேதிகளில் சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் இருந்தும் தமிழகம் முழுவதும் மக்கள் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்தினசரிஇயக்கப்படும்பேருந்துகளடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்ப ட்டுள்ளது. இதன்படி சென்னை கிளாம்பாக்கத்தி லிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று (டிச.30–ம் தேதி) 240 பேருந்துகளும், நாளை 255 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இன்றும் நாளையும் மொத்தம் 55 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் நாளை 11,502 பயணிகளும் புதன்கிழமை 8,380 பயணிகளும் வியாழன் அன்று 11,135 பயணிகளும் வெள்ளிக்கிழமை 7,501 பயணிகளும் சனிக்கிழமை 10,794 பயணிகளும் ஞாயிறு அன்று 19,216 பயணிகளும் முன்பதிவு செய்துள்ளனர். இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினைகண்காணிக்கஅனைத்துபேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



# தமிழ்நாட்டில் இஸ்லாமும், திராவிடமும், ஒன்றாக பயணிக்கும், அதனை யாராலும் பிரிக்க முடியாது!

## அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!!

வாணியம்பாடி, டிச.31

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் நல்லிணக்க பொதுக்கூட்டம் மோட்டுக்கொல்லை பகுதியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திருப்பத்தூர் மாவட்ட தலைவர்எஸ்.டி.நிசார்அஹமத்தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர்கே.அப்துல் அஜீஸ், மாநில கௌரவ் ஆலோசகர் வி.உபேதுர்ரஹ்மான், மாவட்டதுணைத் தலைவர்எஸ்.எஸ்.பி.பாரூக், நகர பொருளாளர் கே.அஷ்வாக் அஹ்மத், வாணியம்பாடி நகர செயலாளர் ஜி .முஹம்மத் பைஜான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் வி. ஹுசைன் அஹமத் அனைவரையும் வரவேற்றார்.

இதில்சிறப்புவிருந்தினர்களாகவேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம்.கதிர் ஆனந்த், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருக்கே தேவராஜி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.சி. வில்வநாதன், நகர மன்ற தலைவர் பி. ஏஜாஸ் அஹ்மத், மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், மேற்கு நகரச் செயலாளர் எம். ஆர்.ஆறுமுகம், கிழக்கு நகர செயலாளர் எம்.ஏ.ஆர் ஷப்பீர் அஹமத் உட்பட காங்கிரஸ், விடுதலை சிறுத்தை, மனிதநேய மக்கள் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினர்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

தமிழனத்தின் வளர்ச்சியையும், மத நல்லிணகத்தையும், அடக்கி பார்க்கிறார்கள், சுதந்திரம் பெறுவதற்கு முதல் குரல் கொடுத்தவர்கள், இஸ்லாமியர்கள், அதற்கு வித்திட்ட மண் வட ஆற்காடு மாவட்டம் தான், சுதந்திரத்திற்கு வித்திட்டது வேலூர் கோட்டை.

இஸ்லாத்தையும் இந்துக்களாகிய எங்களையும், பிரிக்க முடியாது. இந்து என்பது வேறு, இந்துதுவா என்பது வேறு, இந்துவை கடைப்

பிடிக்கின்றோம், இஸ்லாத்தை பெருமையாக நினைக்கின்றோம், அதில் மாற்றம் இல்லை, நாங்கள் இந்து துவா அல்ல இந்து தான், இஸ்லாத்தை விரும்பும் இந்து தான்.

ஒருபக்கம் தமிழர்கள் விரும்பும் தமிழ் கடவுள் என்னும் முருகன் ஒருபகுதியிலும், பண்பாட்டை போற்றும், மசூதி ஒரு பகுதியில் இருக்கிறது என்று சொன்னால் அந்த காலத்தில் நம்மைவிட மதநல்லிணகத்தை விரும்பிய பெரியவர்கள் இருந்திருக்கிறார்கள், இன்றைக்கு இருக்கும் மோசமான, மதவெறி பிடித்த கூட்டம், அலைந்து கொண்டிருக்கின்றது, அதனால் தான் தமிழ்நாட்டின் முதல்வர் சொல்கிறார், உங்கள் பாட்சா தமிழ்நாட்டில் எந்த காலத்திலும் எடுபடாது. தமிழ்நாட்டில் இஸ்லாமும், திராவிடமும், ஒன்றாக பயணிக்கும், அதனை யாராலும் பிரிக்க முடியாது, என பேசினார்.

# நாட்றம்பள்ளி அருகே பாலாற்று நீரில் மூழ்கி 2 பெண்கள் உயிரிழப்பு; போலீசார் விசாரணை!

நாட்றம்பள்ளி, டிச.31



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த புதுப்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் கோகிலா ( 18). இவர் தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார்.

இவரது அக்கா மதுபிரியா ( 22), புதுப்பேட்டை கிழக்கு மேடு பகுதியைச் சேர்ந்த ஜெயகாந்தன் மனைவி சுபஸ்ரீ ( 22), இவரது தம்பி தம்பிதுரை ( 20) மற்றும் ஜெயகாந்தன் நண்பன் பிரவீன் ஆகிய 6 பேர் நாட்றம்பள்ளி தகரகுப்பம் அருகே பாலாற்றில் குளித்துக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக ஆழமான பகுதிக்கு சென்ற கோகிலா மற்றும் சுபஸ்ரீ ஆகிய இருவர் நீரில் மூழ்கி மாயமாகினர்.

இதனை பார்த்த மது பிரியா கத்தி கூச்செடுவே உடன் இருந்தவர்கள் மாயமான கோகிலா, சுபஸ்ரீ ஆகியோரை நீண்ட நேரம் போராடி மீட்டு இருசக்கர வாகனத்தில் நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் கோகிலா மற்றும் சுபஸ்ரீ இருவரும் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற திம்மாம்பேட்டை காவல்துறையினர் இருவர் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரே பகுதியை சேர்ந்த 6 பேர் பாலாற்றில் குளிக்க சென்ற போது இரண்டு பெண்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.








# சேலம் மாநகராட்சி மன்ற இயல்பு கூட்டம்!

சேலம், டிச.31

சேலம்மாநகராட்சிமன்றஇயல்புகூட்டம்மாநகராட்சி மாமன்ற கூட்டு அரங்கில் மேயர் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சேலம் வ. உ. சி. காய்கறி அங்காடி தினசரி சந்தா வசூலிப்பது தொடர்பான, காரசார விவாதம் திமுக மற்றும் அதிமுகவினர்இடையேநடைபெற்றது. மேலும் ஆளும் தரப்பினரே மாநகராட்சி பணிகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள்கூறியது அவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனை அடுத்து மேயர் ராமச்சந்திரன் உறுப்பினர்களை சமாதானம் செய்து உறுப்பினர்கள் கூறிய குறைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதால் அனைவரும் இருக்கையில் அமர்ந்தனர். இதனிடையே மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் யாதவமூர்த்தி மாநகராட்சியின் பல்வேறு பணிகளில் ஊழல் நடைபெறுவதாகவும், அதிகாரிகளிடம் பணிகள் குறித்து கேட்டால் எவ்வித ஒரு விளக்கமும் தராமல் அலட்சியமாக பதில் அளிப்பதாகவும், குறிப்பாக அதிமுக உறுப்பினர்களின் வார்டுகளில் எவ்வித பணிகளும் நடைபெறவில்லை எனக் கூறி, அதிமுக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்வதாக கூறி வெளியேறியது மாமன்ற கூட்டத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

# ஜெருசலேம் புனித பயணத்திற்கு அரசு மானியம் பெற விண்ணப்பிக்கலாம்!

தூத்துக்குடி, டிச.31

தூத்துக்குடி மாவட்டத்தில், ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்ட கிறித்தவ மதத்தினர் அரசு மானியம் பெற விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய 600 கிறித்தவர்கள் பயனடையும் வகையில் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பிய 550 கிறித்தவர்களுக்குநபர்ஒருவருக்குரூ.37,000/ வீதமும் 50 கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.60,000/ வீதமும் ECS முறையில் நேரடியாக மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 01.11.2025க்கு பிறகு ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்ட கிறித்தவ மத பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப படிவத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் / சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம்.

மேலும் www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை 28.02.2026க்குள் உரிய ஆவணங்களுடன் அனுப்ப வேண்டிய முகவரி ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை 600 005 என மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும்நாள்கூட்டத்தில்தாட்கோசார்பாகதேன்கனிக்கோட்டைவட்டம்நாச்சிப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த பிரேமா வெங்கடேஷ் எனக்கு தன்னிலும் மகளிர் நில உடைமை திட்டத்தின் கீழ் ஒரு ஐந்து லட்சம் மதிப்பிலான மொத்த தொகை 15 லட்சம் வழங்கப்பட்ட நிலத்திற்கான பத்திரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார் வழங்கினார்.



# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி நலத்திட்ட உதவிகள்!

தேனி டிச.31

தேனிவடக்கு மாவட்ட, தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன்தலைமை வகித்து 3 ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கி துவக்கி வைத்தும், 3 ஆயிரம் பேருக்கு இலவச வேஷ்டிகள் மற்றும் சேலைகளை வழங்கும் பணியினை துவக்கி வைத்தார் .

இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட அவைத் தலைவர் செல்ல பாண்டியன், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம்,

தேனி தெற்கு நகர பொறுப்பாளர் நாராயண பாண்டியன், வடக்கு நகர பொறுப்பாளர் சூர்யா பாலமுருகன், பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ் , பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் வக்கீல் பாண்டியன், தேனி அல்லிநகரம் நகர் மன்ற தலைவர் ரேணுப்பிரியா பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில்குமார், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் டாக்டர்.வி.ஆர். ராஜன் , தேனி நகர் மன்ற துணைத் தலைவர் வக்கீல் செல்வம் , மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வக்கீல். ராஜசேகரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ்குமார்,உயர் நீதிமன்ற வக்கீல் நிஷாந்த் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆசைத் தம்பி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ராஜேஷ், தேனி நகரத் துணைச் செயலாளர் மகாராஜன், மாவட்ட பிரதிநிதி பண்ணை ரவி மற்றும் கு.ராம்தாஸ், தேனி வடக்கு மாவட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் இளைஞரணி, மருத்துவர் அணி , மாணவரணி, மகளிர் அணி உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பாகநிலை முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலுகாவிற்கு உட்பட்ட உலிக்கல் பேரூராட்சி அலுவலகத்தில் சட்ட உதவி மையம் நீதிபதி அம்மாமேகலா மைதிலி அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில்குமரன் வழக்கறிஞர் ராமச்சந்திரன் பேரூராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஏராளமான கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி மாநகராட்சியில் இன்று சாதாரண கூட்டம்!

தூத்துக்குடி,டிச.31

தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் 2025 டிச 31 ல் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது

தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் 2025 டிச 31 ல் 10.15 மணிக்கு சாதாரண கூட்டம் விதி எண் 156 1 ன்கீழ் நடைபெற உள்ளது. இதில் பல்வேறு பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.



# எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தநாள் முப்பெரும் விழா!

தூத்துக்குடி,டிச.31

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் பாரதி நினைவு மண்டபத்தில் வைத்து மகாகவி பாரதி 144 வது பிறந்தநாளை முன்னிட்டு பாரதியார் பிறந்தநாள் கவியரங்கம் நடைபெற்றது. இதில் நூல் வெளியீடும்,கவிஞர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு தெரிவித்தல், விருது வழங்குதல்நடைபெற்றது. இந்நிகழ்வைஅனைத்துலக தமிழ்சங்கம்,மற்றும் மதுரை காமராசர் பல்கலை.,ஆகியவை இணைந்து நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சிக்கு மதுரை காமராசர் பல்கலை. தமிழ்துறை தலைவர் சத்தியமூர்த்தி தலைமை தாங்கினார். கவிஞர்கள், அருணாசுந்தரராசன், மதுரை பரணிசுபசேகர், ஈரோடு இளையகோபால் மற்றும் பாலசரஸ்வதி,தில்லிகுமார் ஊடகவியலாளர் கி.ம. சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார்கள்.. வரவேற்புரை ஆற்றி,நிகழ்ச்சியை முத்துவிஜயன் தொகுத்து வழங்கினார். தொடர்ந்து நடைபெற்ற கவியரங்கிற்கு தமிழரசன் தலைமை தாங்கினார்.

இதில் கவிஞர்கள் பாப்பாக்குடி முருகன்,செங்குட்டுவன்,சித்ரா இளஞ்செழியன்,செல்வமுத்து மன்னார்ராஜ்.,அந்தோணி சுரேஷ் உட்பட நூற்றுக்கணக்கானோர்பங்கேற்று கவிதை வாசித்தனர். முனைவர் பரமசிவம் எழுதிய பைந்தமிழ் அடையாளத்தை தொலைக்காதே எனும் நூல் வெளியீடு நடைபெற்றது. நிகழ்ச்சியில் குச்சனூர் ஸ்ரீ சனீஸ்வரர் அறக்கட்டளை நிறுவனர் முனைவர் இராஜேந்திரன் கலந்து கொண்டு புத்தகங்களை வெளியிட்டார். மேலும் தில்லிகுமார் மற்றும் ஊடகவியலாளர் கி.ம.சங்கர் ஆகியோருக்கு தமிழ் மொழி காவலர் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மதுரை காமராசர் பல்கலை. தமிழ்துறை தலைவர் சத்தியமூர்த்தி பேசுகையில், இந்த விழாவில் இளைஞர்கள் அதிக அளவில் பங்கேற்பதும் குறிப்பாக தமிழ் அல்லாத பிற துறை இளைஞர்கள் பாரதியார் மீதுள்ள பற்றால் பங்கேற்பது தனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

தொடர்ந்து ஊடகவியலாளர் கி.ம.சங்கர் பேசுகையில், பாரதி பிறந்தநாள் விழாவை அரசு முன்னெடுத்து பிரமாண்டமாக விழாவாக நடத்த வேண்டுமென கோரிக்கை வைத்தார். கவிஞர் டில்லிகுமார் பேசுகையில், 2026 ம் ஆண்டு ஜன 9 ம் தேதி சென்னையில் உள்ள பாரதி இல்லத்தில் வைத்து பாரதி பிறந்தநாள் விழாவை பன்னாட்டு அளவில் எடுத்து சென்று கொண்டாட பாவேதாக கூறினார்.



விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட அயன்கொல்லங்கொண்டான் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக வைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# இந்தியாவின் மிகப்பெரிய சோப் பிராண்டாக 'சந்தூர்'; ரூ.2,850 கோடி விற்பனையுடன் புதிய சாதனை!

கோயம்புத்தூர் , டிச.31




விப்ரோ கன்ஸ்யூமர் கேர் & லைட்டிங் நிறுவனத்தின் 'சந்தூர்' சோப், கடந்த 12 மாதங்களில் ₹2,850 கோடி நிறுவனம் விற்பனையை (INDAS) பதிவு செய்து, இந்தியாவின் மிகப் பெரிய சோப் பிராண்டாக உருவெடுத்துள்ளது. 1985ல் பெங்களூருவில் சோதனை அறிமுகமாகத் தொடங்கிய இந்த பிராண்ட், சந்தனம்–மஞ்சள் அடையாளத்துடன் நான்கு தசாப்தங்களில் இந்திய இல்லங்களில் உறுதியான இடத்தைப் பெற்றுள்ளது.

'இளமையான தோற்றம் உள்ள சருமம்' என்ற எளிமையான ஆனால் தாக்கம் கொண்ட வாக்குறுதியையும், காலத்திற்கேற்ப மாறிய 'சந்தூர் மம்' கதாபாத்திரத்தையும் மையமாகக் கொண்டு, தயாரிப்பு தரம், செயல்திறன், பேக்கேஜிங் மற்றும் விளம்பரங்களில் தொடர்ச்சியான மேம்பாடுகள் சந்தூர் வளர்ச்சிக்கு துணை போயின. மாநிலம்மாநிலமாக ஆழமான கவனம் செலுத்திய உத்தி மூலம், 2009க்குள் தெற்கு மற்றும் மேற்கு இந்தியாவில் முதலிடத்தைப் பிடித்தது.

இதுகுறித்து விப்ரோ கன்ஸ்யூமர் கேர் & லைட்டிங் நிறுவனத்தின் சிஇஓ வினீத் அகர்வால், "இந்தியாவின் மிகப் பெரிய சோப் பிராண்டாக மாறியது எங்களுக்கு அமைதியான பெருமிதத்தின் தருணம். நுகர்வோர் புரிதல், கட்டுப்பாடான செயல்பாடு மற்றும் தொடர்ச்சியான தர மேம்பாடுகள் இந்த வெற்றியின் அடித்தளம்," என்றார்.

மேலும், விப்ரோகன்ஸ்யூமர்கேர்தலைமை நிர்வாக அதிகாரி நீரஜ் கத்ரி, "எங்கள் குழுக்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் கூட்டாளர்களின் அர்ப்பணிப்பும் நம்பிக்கையும் இந்த சாதனையை சாத்தியமாகியுள்ளது," எனத் தெரிவித்தார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



இராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் சந்திரகலா அவரது அலுவலக கூட்டரங்கில் நடந்த மக்கள் குறை தீர்வு கூட்டத்தில் பொதுமக்கள், மாற்றுத் திறனாளிகளை சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளைக் கேட்டறிந்தார்.உடன் டி ஆர் ஓ .தனலிங்கம், திட்டஇயக்குநர் சரண்யாதேவி, மற்றும் துணை ஆட்சியர்கள்,அலுவலர்கள் இருந்தனர்.



ஆதிதிராவிடர்மற்றும்பழங்குடியினர்நலத்துறையின்சார்பில்,மாணவ,மாணவியர்களின் திறனை ஊக்குவிக்கும் வகையில் சேலம் மாவட்ட சமூக நீதி கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான "நல்லோசை களமாடு" நிகழ்ச்சியின் மூலம் நடத்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 59 மாணவ, மாணவியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாவட்ட ஆட்சியரகத்தில் வழங்கினார்.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட, பாச்சல் ஊராட்சி, குருபன்ஸ் காலனி பகுதியில், எட்டாவது சுற்று கால்நடைகளுக்கான கால் மற்றும் வாய் நோய் (கோமாரி நோய்) தடுப்பூசி முகாமை மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி , ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி துவக்கி வைத்து, பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடைகளுக்கான தாது உப்பு கலவைகளை வழங்கினார்கள். உடன் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர்இளவரசன், உதவிஇளவரசன், உதவி இயக்குநர்சீனிவாசன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கவிதா தண்டபாணி, கால்நடை மருத்துவர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள், உள்ளாட்சி பிரிதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டம்:

# அத்துமீறும் நபர்களை காவல்துறை கட்டுப்படுத்த வேண்டும்!

### இந்து முன்னணி கோரிக்கை!!

கோவை, டிச.31–

இந்துமுன்னணி மாநிலத்தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் கிறி ஸ்துமஸ் தினத்தன்று சென்னை, காஞ்சிபுரம், இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் உள்ளிட்ட பல இடங்களில் நடு இரவில் போக்குவரத்துக்கு இடையூறாகவும் பொது மக்களை அச்சுறுத்தும் வகையிலும் இரவு முழுவதும் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகச் சென்றுள்ளனர். இரவு முழுவதும் வெடிகளை பொது இடத்தில் வெடித்தும் தொந்தரவு செய்தனர். அத்துமீறி அநாகரிகமாக நடந்தவர்கள் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. வாழ்த்து கூறுகிறோம் என்று மக்களிடம் அநாகரிகமாக நடந்த சம்பவங்கள் சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ளன. ஆனால் இந்துக்களின் திருவிழாவான தீபாவ ளிக்கு வெடி வெடிப்பதில் கட்டுப்பாடு விதிப்பது. திருவிழாவில் நேர கட்டுப்பாடு உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து தமிழக அரசு இந்துக்களுக்கு விரோதமாக நடந்து கொள்கிறது. இந்நிலையில் வருகின்ற ஆங்கில புத்தாண்டில் கொண்டாட்டம் என்ற பெயரில் இரவு முழுவதும் இருசக்கர வாகனத்தில் பைக் ரேஸ் நடத்துவதை தடுக்க கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும். இரவு நேர அநாகரிகமான ஆபாச நடனங்களை தடை செய்ய வேண்டும். நள்ளிரவில் மது அருந்தி பட்டாசு வெடித்து ஹேப்பி நியூ இயர் என அநாகரிகமாக தொந்தரவு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்க வேண்டும்.



இந்து ஆலயங்கள் மற்றும் இந்துக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகள் மற்றும் பொது மக்கள் அமைதியாக ஓய்வெடுக்கும்நேரத்தில்கூச்சலிட்டு கத்துவதால் தேவையற்ற சச்சரவுகள் ஏற்படும் . எனவே ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு கட்டுப்பாடுகளை அறிவிக்க வேண்டும்.போதை ஆசாமிகள் மற்றும் போதை பொருள் நடமாட்டத்தை கண்காணித்து கட்டுப்படுத்த, தீவிர நடவடிக்கை எடுக்க காவல்துறை ரோந்து வாகனத்தை அதிகப்படுத்த வேண்டும். தமிழகத்தில் அசம்பாவிதம் நடக்காமல் கட்டுப்படுத்த வேண்டியது அரசின் கடமை என்பதை இந்து முன்னணி சார்பில் வலியுறுத்தி கூறுகிறோம் என்று அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

கோவை,டிச.31–

'நலன்' அறக்க ட்டளையின் முதலாம் ஆண்டுவிழாமற்றும்நலத்திட்டஉதவிகள் வழங்கும் நிகழ்வு சங்கனூர் கிரிநாத் யோகாஹாலில் சிறப்பாக நடைபெற்றது. அறக்கட்டளையின் நிறுவனர் நிரஞ்சன் தலைமையில்நடைபெற்ற இந்நிகழ்வில், 70க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்கள் பயனடைந்தனர். ஜீவஜோதி இரத்ததான அறக்கட்ட ளையின் நிறுவனர் சங்கர் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார். இந்நிகழ்வில் மோட்டார் பொருத்தப்பட்ட மற்றும் சாதாரண மூன்று சக்கர வாகனங்கள், சக்கர நாற்காலிகள், வாக்கர்கள், கழிப்பறை வசதியுடன் கூடிய வாக்கர்கள், ஊன்றுகோல்கள், 'சுகம்யா' பிரம்பு மற்றும் பிரெய்லி கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய நலத்திட்டப் பொருட்கள் வழங்கப்பட்டன. விழாவில் பேசிய நிரஞ்சன், கல்வி மேம்பாடு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு, மாற்றுத்திறனாளிகள் நலன் மற்றும் உணவு தானம் ஆகியவற்றை முதன்மை நோக்கமாகக் கொண்டு அறக்கட்டளை செயல்பட்டு வருவதாக தெரிவித்தார். விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் மதிய உணவு மற்றும் தேநீர் வசதிகளை தொழில்முனைவோர் கதிரவன் வழங்கினார். தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

# 50 ஆண்டாகியும் பட்டா வழங்கவில்லை; தூத்துக்குடி ஆட்சியரிடம் பா.ஜ.க. நிர்வாகி புகார்!

தூத்துக்குடி, டிச.31

தூத்துக்குடி மாப்பிள்ளையூரணியில் 60 ஆண்டுகளாக வசித்து வரும் பொதுமக்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென பாஜக நிர்வாகி மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை வைத்துள்ளார்.

பொதுமக்கள் மேற்கண்ட முகவரியில் சுமார் 50 ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள். பொதுமக்கள் இதே பகுதியில் வீடுகள் அமைத்து மின் இணைப்புகள் பெற்று அரசு வழங்கும் நலத்திட்டங்களையும் பெற்று வருகிறார்கள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பொதுமக்களுக்கு அரசு இலவச பட்டா வழங்கினார்கள் குறிப்பிட்ட நபர்களுக்கு அந்த இலவச பட்டாவும் வழங்கப்படவில்லை. ஆனால் தற்போது பொதுமக்களுக்கு பெயர் மற்றும் பட்டா நம்பர் கிராம நிர்வாக அலுவலக பதிவேட்டில் இன்று வரை இடம்பெறவில்லை

பொதுமக்கள் பகுதிகளை ஆய்வு என்பதை செய்து பதிவேற்றம் செய்தார்கள் ஆனால் தற்போது வரை பொது மக்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை எந்த நடவடிக்கைகளும் வழங்குவதற்கான அறிகின்றோம் தாங்கள் (மாவட்டஆட்சியர்) தமிழக அரசின் இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கின்றோம்.

# நத்தம் அருகே பறவைகள் கணக்கெடுப்பு பணி!



நத்தம், டிச.31

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே ஊராளிபட்டி மற்றும் கோபால்பட்டி பகுதிகளில் உள்ள பூலான்குளம் பகுதியில் அழகர்கோவில் வனச்சரகம் சார்பில் ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு பணி நடைபெற்றது. இதில் வனச்சரக அலுவலர் சுந்தரவேல் உள்ளிட்ட வனத்துறையினர் கலந்து கொண்டு குளங்களில் எத்தனை பறவைகள் உள்ளன என்பது குறித்தும், அரிய வகை பறவைகள் குறித்தும் கணக்கெடுப்பு பணி நடத்தினர். இதில் வனக்காப்பாளர்கள் சங்கீதா,அம்சபாண்டி, வனக்காவலர்கள் இஷாபிரியா, வனஜா உள்ளிட்ட கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். இதைப் போலவே நத்தம் அருகே சிறுகுடி கேசரிக்குளம் பகுதியில் நத்தம் வனச்சரகம் சார்பில் ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு பணி நடைபெற்றது. இதில் நத்தம் வனச்சரக அலுவலர் ஆறுமுகம் உள்ளிட்ட வனத்துறையினர் கலந்து கொண்டு குளங்களில் எத்தனை பறவைகள் உள்ளன என்பது குறித்தும், அரிய வகை பறவைகள் மற்றும் வெளிநாட்டு பறவைகள் குறித்தும் கணக்கெடுப்பு பணி நடத்தினர்.இதில் வனத்துறையினர், கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

# கோபி அருகே சரக்கு வாகனம் மோதி வாலிபர் பலி!

கோபி டிச.31

கோபி அருகேநம்பியூர் அடுத்தசாணார்புதூரை சேர்ந்தவர் சுப்பிரமணி. இவருடைய மகன் மகேஸ்வரன் (21). இந்தநிலையில் முன்தினம் இரவு இவர் சொந்த வேலை காரணமாக மோட்டார்சைக்கிளில் நம்பியூர் சென்று விட்டு மீண்டும் வீடு திரும்பி கொண்டிருந்தார். நம்பியூர் கோபி மெயின் ரோட்டில் விசார தியேட்டர் பிரிவு அருகே சென்றபோது எதிரே வந்த சரக்கு வாகனமும், மகேஸ் வரனின் மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண் டன. இந்த விபத்தில் படுகாயம் அடைந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக கோபி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். டாக்டர்கள் ஏற்கனவே மகேஸ்வரன் உயிரிழந்துவிட்டதாக றனர். அங்கு அவரை பரிசோதனை செய்த தெரிவித்தனர். இதுகுறித்து நம்பியூர் போலீசார் வழக்கு ப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விஷம் குடித்து மூதாட்டி சாவு!

கோவை,டிச.31–

கோவை சிங்காநல்லூர் விநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் மனைவி பழனியம்மாள் (84) .இவர் இடுப்பு வலியால் அவதி பட்டு வந்தார். இதனால் வீட்டில் தனியாக இருந்தபோது ஸ்டெயின் ரிமூவர் அமிலத்தை குடித்து தற்கொலைக்கு முயன்றார்.

இதையடுத்து அவரை உடனடியாக உறவினர்கள் சிங்காநல்லூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் மேல்சிகிச்சைக்காக கோவை பீளமேடு பகுதியில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று பழனியம்மாள் உயிரிழந்தார். இது குறித்து அவரது மகன் நடராஜ் (54), சிங்காநல்லூர் போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் சிங்காநல்லூர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். உயிரிழந்த பழனியம்மாள் உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த சம்பவம் குறித்து சிங்காநல்லூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## டாஸ்மாக் பாரில் மதுபோதையில் தகராறு:

# காசாளர் மீது தாக்குதல் ; கண்ணாடி உடைப்பு!

### இளைஞர் மீது வழக்கு!!

கோவை, டிச.31–

கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள டாஸ்மாக் பாரில் மதுபோதையில்தகராறு செய்து காசாளரைதாக்கிகண்ணாடியை உடைத்த இளைஞர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த தர்மா (25) என்பவர், கடந்த 8 ஆண்டுகளாக கோவை ஆர்.எஸ்.புரம், டி.பி.ரோட்டில், உள்ள டாஸ்மாக் கடையில் காசாளராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில், கடந்த 24 ஆம் தேதி இரவு சுமார் 10 மணி அளவில், ஹரிஷ் என்கிற விக்னேஷ் என்பவர் மதுபோதையில் டாஸ்மாக் பாருக்கு வந்து, காசாளர் தர்மாவிடம் தகராறில் ஈடுபட்டார். பின்னர் ஆபாச வார்த்தைகளால் திட்டியதுடன், காசாளரை தாக்கியுள்ளார். இதில், தர்மாவுக்கு தலையில் ரத்தக் காயம் ஏற்பட்டது. மேலும், அங்கு இருந்த கண்ணாடியையும் உடைத்துள்ளார். இதுகுறித்து தர்மா அளித்த புகாரின் பேரில், ஆர்.எஸ்.புரம் போலீசார் ஹரிஷ் என்கிற விக்னேஷ் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் டிசம்பர் 29 தேசிய கால்நடை திறப்பு திட்டத்தின் கீழ் NADCPFMD எட்டாவது சுற்று வாய் நோய் தடுப்பூசி முகாம் என்று காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் எருமாம்பட்டி கிராம ஊராட்சிக்கு உட்பட்ட கூரப்பட்டி. கிராமத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது முகாமில் 210 கால்நடைகள் தடுப்பூசி போடப்பட்டது மேலும் இந்த தடுப்பூசி முகாமை மதியழகன் எம்.எல்.ஏ., கலெக்டர் தினேஷ் குமார் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.



# முதுகுளத்தூர் அருகே தேரிருவேலியில் பா.ஜ.க. ஆர்ப்பாட்டம்!

முதுகுளத்தூர் டிச 31

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் மத்திய அரசு அறிவித்த கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்தாத தமிழக அரசை கண்டித்து கண்டன ஆர்பாட்டம் ஒன்றிய தலைவர் திரு மோகன்தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மாநில பொதுச்செயலாளர் திரு பொன் பாலகணபதி அவர்கள் கலந்து கொண்டார்கள். மேலும் மாவட்ட துணைத்தலைவர் திரு கோபாலகிருஷ்ணன் அவர்கள், ஒன்றிய பார்வையாளர் திரு சேதுராமு மாநில பொதுக்குழு உறுப்பினர் ராமசாமி அவர்கள், மாநில திட்டங்கள் உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்கள், , விளையாட்டு மற்றும் மேம்பாட்டு பிரிவு மாநில செயலாளர் இளையராஜா அவர்கள், மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மாநில செயளாலர் திரு முத்துலிங்கம் அவர்கள், முன்னாள் பிரச்சார பிரிவு மாநில செயலாளர் நாகூர் பாண்டியன் அவர்கள், கடலாடி கிழக்கு ஒன்றிய தலைவர் டாக்டர் திரு ஸ்டாலின் அவர்கள், கடலாடி வடக்கு ஒன்றிய தலைவர் திரு முருகன் அவர்கள், முன்னாள் இராணுவ பிரிவு மாவட்ட தலைவர் திரு மேகசெல்வம் அவர்கள், விருந்தோம்பல் பிரிவு மாவட்ட தலைவர் செந்தில்குமார் அவர்கள், கூட்டுறவு பிரிவு மாவட்டத் தலைவர் பசும்பொன் ராமமூர்த்தி அவர்கள், பட்டியலணி மாவட்ட பொதுச்செயலாளர் திரு காளிராஜா அவர்கள், சிறுபான்மையணி மாவட்ட துணைத் தலைவர் பொன்னையா சபரி முத்து அவர்கள், முன்னாள் ராணுவ பிரிவு மாவட்டச் செயலாளர் சந்தன பாண்டி அவர்கள், அமைப்பு சாரா பிரிவு மாவட்ட செயலாளர் சரவணகுமார் அவர்கள், கமுதி தெற்கு ஒன்றிய தலைவர் அழகுமலை அவர்கள்,ஒன்றிய பொதுச்செயலாளர்கள் கவிக்குமார் முனியசாமி, ஒன்றிய பொருளாளர் ஆறுமுகம் அவர்கள், பட்டியல் அணி ஒன்றிய தலைவர் பஞ்சவர்ணம் அவர்கள், பிரச்சார பிரிவு ஒன்றிய தலைவர் வேம்புதுரை அவர்கள் சக்தி கேந்திர பொறுப்பாளர் தென்னவன் அவர்கள் தேரிருவேலி கிளைதலைவர் சுரேஷ் பாபு அவர்கள், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், சக்திகேந்திர பொறுப்பாளர்கள், கிளைத் தலைவர்கள், BLA2கள் மற்றும் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு தமிழக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பினர்.

# ஓசூர் அரசு மருத்துவமனையில் ஊழியர்கள் அலட்சியம்!

### வக்கீல்கள் சங்க தலைவர் குற்றச்சாட்டு!!

ஓசூர், டிச.31

ஓசூர் அரசு மருத்துவமனையில் டாக்டர்கள் இல்லாமல், ஊழியர்கள் அலட்சியத்துடன் இருப்பதாக பல்வேறு புகார்கள் எழுந்துள்ளன. நோயாளிகளுக்கு சரியான சிகிச்சை இல்லாமல், அவர்கள் தனியார் மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுவதாக ஓசூர் பார் அசோசியேஷன் தலைவர் சிவன்னா குற்றம்சாட்டி யுள்ளார். தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டங்களுக்கு இது கெட்ட பெயரைத் தருவதாகவும், அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் அவர் கூறியதாவது:–

தனது உதவியாளர் ரவிந்திர ரெட்டி, கடந்த 23.12 அன்று மதியம் 3.30 மணியளவில் ஓசூர் நீதிமன்றம் அருகே டூவிலர் மோதி விபத்திற்கு உள்ளானதால், அவரை சிகிச்சைக்காக ஓசூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, டாக்டர் இருக்கவில்லை.

ஊழியர்கள் நோயாளிக்கு ஸ்ட்ரெச்சர் கூட வழங்கவில்லை. சிஎட் ஸ்கேனுக்கு



ரூ.1,000 வசூலித்தும், டெக்னீஷியன் இல்லை என சோதனை செய்ய மறுத்தனர். பணத்தை திரும்பக் கேட்டபோது, "மீண்டும் வந்து ஸ்கேன் செய்யுங்கள்" என மறுத்துவிட்டனர். இறுதியில், நோயாளி சிகிச்சை இன்றி தனியார் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

இதேபோல், குறைந்த சர்க்கரைநோயால் பாதிக்கப்பட்ட மற்றொரு நோயாளியையும் டாக்டர் சிகிச்சை செய்யாமல், "கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு செல்லுங்கள்" என அனுப்பினார்.

இதனால் அந்த நோயாளியும் தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றார் என்றார்.

## விஜயகாந்த் நினைவு தினம்:

# 50 ஆயிரம் பேருக்கு தே.மு.தி.க. அன்னதானம்!



திருச்செங்கோடு, டிச.31

திருச்செங்கோடு மற்றும் நாமக்கல் மாவட்டம் முழுவதும் தேமுதிக தலைவர் விஜயகாந்த் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாமக்கல் வடக்கு மாவட்டம் முழுவதும் 50 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது . அதே போல திருச்செங்கோடு அண்ணா சிலை அருகில் திருச்செங்கோடு நகர கழகம் சார்பில் நகர செயலாளர் குணசேகரன் தலைமையில் கேப்டனுடைய திருவுருவப்படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் விஜய்சரவணன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.இந் நிகழ்ச்சிக்கு மாவட்ட கழக பொருளாளர் மகாலிங்கம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் சக்திவேல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், நாகராஜ், திருச்செங்கோடு வடக்கு ஒன்றிய செயலாளர் நாகராஜ், மாவட்ட தொழிற்சங்க தலைவர் சதீஷ், மாவட்ட நெசவாளர் அணி துணைச்செயலாளர் இளமுருகன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் அலமேலு, மாவட்ட விவசாய அணி துணைச் செயலாளர் ராஜா, மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் சரவணன், நகர அவைத் தலைவர் சுரேஷ்,ஆண்டிபாளையம் முன்னாள் தலைவர் சுரேஷ், திருச்செங்கோடு நகர நிர்வாகிகள் ராஜா,பெரியசாமி, கார்த்தி, பழனிச்சாமி, குமரேசன், சேகர், பானு ரேகா, லோகேஷ், ஜீவானந்தம் ரூபன், செங்கோட்டுவேல், கேசவன், சரவணன், கலந்து கொண்டனர்.

### ஏற்காட்டில் 600 அடி பள்ளத்தில் பெண் பிணம்:

# கள்ளக்காதலியை கழுத்தை நெரித்து கொன்ற காதலன் கைது!

ஏற்காடு, டிச.31

ஏற்காட்டில் இருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது மாரமங்கலம் கிராமம். இந்த கிராமத்தில் லாரி ஓட்டுநரான சண்முகம் மற்றும் அவரது மனைவி சுமதி ஆகியோர் வசித்து வந்துள்ளனர். இவர்களுக்கு திருமணமாகி 2 வருடம் ஆன நிலையில் சுமதிக்கும் அதே பகுதியில் வசிக்கும் வெங்கடேசுக்கும் கள்ள தொடர்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னதாக திடீரென சுமதியை காணவில்லை என அக்கம் பக்கத்தில் உள்ள உறவினர்கள் மற்றும் அவரது கணவர் ஆகியோர் தேடி வந்துள்ளனர்.

இந்த நிலையில் கள்ள காதலன் வெங்கடேஷ் அந்த ஊர் செல்லும் பஸ் மூலம் ஒரு சிறு பார்சலை கொடுத்து அப்பகுதியில் உள்ள மளிகை கடையில் கொடுத்து சண்முகத்திடம் கொடுக்கச் சொன்னதாக கூறப்படுகிறது.

அந்த பார்சலை திறந்து பார்த்த சண்முகம்



அதிர்ச்சி அடைந்தார். அந்த பார்சலில் சுமதியின் தாலி இருக்க உடனடியாக சண்முத்திற்க்கு வெங்கடேஷ் மீது சந்தேகம் வந்தது.

இந்நிலையில் மேற்படி சுமதிக்கு மாரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேஷ் (22) மரம் வெட்டும் தொழில் செய்பவர், என்பவருடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

இந்நிலையில் மேற்படி சுமதி கடந்த 23 ஆம் தேதி மதியம் வீட்டிலிருந்து வெளியே சென்றவர் வீட்டிற்கு வரவில்லை எனக் கூறி கடந்த 25 தேதி அவரது கணவர் சண்முகம் ஏற்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

இதன் பேரில் வெங்கடேஷை நேற்று 29 ஆம் தேதி ஏற்காடு காவல் நிலையம் அழைத்து வந்து விசாரித்தனர்.

சுமதியை 23–ந் தேதி மதியம் சுமார் 1.00 மணி அளவில் மாரமங்கலம்தோட்ட பகுதியில் பேசி கொண்டிருந்த போது சுமதி போனுக்கு வேறு ஒரு போன்கால் வந்ததால்சந்தேகம்அடைந்து யார் என்று கேட்டு சுமதிக்கும் வெங்கடேஷ்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இருவருக்கிடையே வாக்குவாதம் முற்றிய நிலையில்

சுமதி அணிந்திருந்த துப்பட்டாவால் கழுத்தை நெறித்து கொலை செய்து வெள்ளை கோணி பையில் கட்டி எடுத்து கொண்டு தனது இரு சக்ர வாகனத்தில் முன்னால் வைத்து கொண்டு கொட்டச்சேடு வழியாக குப்பனூர் செல்லும் சாலையில் முனியப்பன் கோவில் தாண்டி அடுத்த வளைவில் சுமார் 600 அடி பள்ளத்தில் கோணி பையுடன் பிரேதத்தை தள்ளி விட்டதாக வெங்கடேஷ் கூறியதின் பேரில் ஏற்காடு காவல் ஆய்வாளர் பொறுப்பு மல்லூர் காவல் ஆய்வாளர் பாலஜி ரமணன், வனத்துறை அலுவலர் சிவக்குமார், மற்றும் தீயணைப்புத் துறையினர் ஆகியோர் பிரேதம் போடப்பட்டுள்ள இடத்தில் தேடினர்.

சுமார் நான்கு மணி நேரமாக போராடி கடும் பள்ளத்தாக்கில் இறங்கி பிரேதத்தை மீட்டு வந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக தொடர்ந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



சேலம் மாவட்டம் இரண்டாவது அக்ரஹாரம் பகுதியில் எழுந்தருளி இருக்கும், அருள்மிகு ஸ்ரீ பிரசன்ன வரதராஜ பெருமாள் திருக்கோவிலில், வைகுண்ட ஏகாதசி பண்டிகை முன்னிட்டு, வரதராஜ பெருமாளுக்கு அதிகாலை முதலே சிறப்பு அபிஷேக பூஜைகள் நடத்தப்பட்டு, வண்ண வண்ண வாசனை மலர்கள் சூடி, சிறப்பு அலங்காரத்தில், அதிகாலை 545 மணிக்கு சொர்க்கவாசல் வழியாக எம்பெருமான் வரதராஜ பெருமாள் சிறப்பு காட்சி அளித்தார். சொர்க்கவாசல் வழியாக பெருமாளை தரிசித்த பக்தர்கள், கோவிந்தா கோவிந்தா என்று கூறியவாறு பெருமாளை தரிசித்தனர்.

### போச்சம்பள்ளி அருகே அரசம்பட்டி கிராமத்தில்

## கோபிநாத கோவிலில் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் வழியாக சுவாமி தரிசனம்!

கிருஷ்ணகிரி, டிச.31

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த அரசம்பட்டி கிராமத்தில் உள்ள 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீ பாமா ருக்குமணி சமேத கோபிநாத சுவாமி கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் மார்கழி மாத முக்கிய திருவிழாவான வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. விழாவையொட்டி, அதிகாலை முதலே மூலவர் கோபிநாத சுவாமி மற்றும் பாமா, ருக்குமணி தாயாருக்கு பால், தயிர், தேன், இளநீர், மஞ்சள், குங்குமம், பஞ்சாமிர்தம், பன்னீர் மற்றும் சந்தனம் உள்ளிட்ட 16 வகையான வாசனை திரவியங்களால் மகா அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் சுவாமிக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டது. விழாவின் முக்கிய நிகழ்வாக, உற்சவர் மூர்த்தி கோபிநாத சுவாமி வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, மேளதாளங்கள் முழங்க பரமபத வாசல் எனப்படும் சொர்க்கவாசல் வழியாக எழுந்தருளினார். அப்போது அங்கு கூடி



யிருந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் "கோவிந்தா... கோவிந்தா..." என பக்தி முழக்கமிட்டு சுவாமியை தரிசனம் செய்தனர். இந்த விழாவில் அரசம்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு நீண்ட வரிசையில் நின்று சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு கோவில் நிர்வாகத்தின் சார்பில் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. கோவில் தர்மகர்த்தா கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

### பாலக்கோடு கடைவீதியில்

## போக்குவரத்திற்க்கு இடையூறாக உள்ள கடைகளை அகற்றாவிட்டால் போராட்டம்!

### பாஜக நிர்வாகி ஆட்சியர், எஸ்.பியிடம் மனு

பாலக்கோடு, டிச.31

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு பேருந்துநிலையத்திற்குதினசரி அண்டை மாநிலமான கர்நாடகா, ஆந்திரா, மற்றும் கோயம்புத்தூர், சேலம் சென்னை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தினசரி 250க்கும் மேற்பட்ட பேருந்துகள் வந்து செல்கின்றன.

பாலக்கோடு சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த மாரண்டஅள்ளி, வெள்ளிச் சந்தை, சோமன அள்ளி, புலிக்கரை உள்ளிட்டகிராமப்பகுதிகள்மற்றும்பல்வேறு ஊர்களில் இருந்து தினசரி 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாலக்கோட்டிற்க்கு வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் பேரூராட்சிக்குப்பட்ட பேருந்து நிலையம், எம்.ஜி.ரோடு, கடை வீதி, ஸ்தூபிமைதானம், தக்காளிமண்டி முதல் காவல் நிலையம் வரை சாலையின் இருபுறமும் கடைகளின் முன்பு பேரூராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கடை வைத்துள்ளனர். மேலும் சாலையில் பொதுமக்களுக்கு இடையூறாக காய்கறி கடைகள், தள்ளுவண்டி கடைகள் மற்றும் இரு சக்கரம் நான்கு சக்கர வாகனங்களால் போக்குவரத்து பாதிப்பு ஏற்



பட்டு வருகிறது.

அவசர காலங்களில் ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் கூட செல்ல முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்துபேரூராட்சிநிர்வாகத்திடம் பலமுறை புகார் அளித்தும் கண்டுகொள்ளாமல் இருந்து வருகின்றனர்.

இனி வரும் காலங்களில் புத்தாண்டு, பொங்கல், கோயில் விழாக்கள் உள்ளிட்ட பண்டிகைகள் வர உள்ளதால்

போக்குவரத்து நெரிசலை குறைக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு உடனடியாக ஆக்கிரமிப்புக்களை அகற்ற வேண்டும் என சமூக ஆர்வலர் பி.கே.சிவா ஆட்சியர் மற்றும் எஸ்.பியிடம் மனு அளித்துள்ளார்.



## ஈரோட்டில் தென்னை நார் உற்பத்தியாளர்கள் சங்க பொதுக்குழு ஆலோசனை கூட்டம்!

ஈரோடு, டிச.31

ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்ட தென்னை சார்புகள் உற்பத்தியாளர் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் ஈரோடு சென்னிமலை சாலையில் உள்ள அம்மன் காட்டேஜில் நடைபெற்றது. சங்கத்தலைவர்தனசேகரன் தலைமை வகிக்க, செயலாளர் சதாசிவம் வரவேற்புரையாற்றி புதிய உறுப்பினர்களை அறிமுகம் செய்தார். சிறப்பு விருந்தினர்களாக ஈரோடு மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திருமுருகன் மற்றும் டான்சியா துணைத் தலைவர் சுப்ரமணியன் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழ்நாடு காயர் பெடரேஷன் தலைவர் பூச்சாமி சிறப்புரையாற்றினார். பொருளாளர் செந்தில்குமார் வரவு செலவு கணக்குகளைத் தாக்கல் செய்ய, அவை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. கூட்டத்தில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திருமுருகன் பேசுகையில், "தமிழக அரசு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை வாயிலாக தென்னை நார் தொழிலுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்ட 'டான்காயர்' நிறுவனம் மூலம் உலகத்தரம் வாய்ந்த சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. நிகழ்வில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த செயல்முறை விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

இறுதியில் சங்கத் துணைத் தலைவர் சண்முகம் நன்றியுரை கூறினார். இதில் திரளான தென்னை நார் உற்பத்தியாளர்கள் பங்கேற்றனர்.





அகில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சென்னை தலைமை அலுவலகம் சத்தியமூர்த்தி பவனில் அகில இந்திய ராஜீவ் காந்தி சமூக சேவை அறக்கட்டளையின் தாளாளர் பாண்டியன் முன்னிலையில் நூற்றுக்கு மேற்பட்ட மாவட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர் அதில் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளரும் ராஜீவ் காந்தி சமூக சேவை அறக்கட்டளையின் கடலூர் மாவட்டத்தின் ஒருங்கிணைந்த மாவட்ட தலைவருமான ஜானகிராமன் திட்டக்குடி தனி தொகுதியின் சட்டமன்ற வேட்பாளராக விருப்ப மனு தெரிவித்தார்.

### ராசிபுரம் பூக்கடை பகுதியில்

## வாடகை பாக்கி வைத்துள்ள கடைகளுக்கு 'சீல்' வைப்பு!

### இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் நடவடிக்கை!!

ராசிபுரம், டிச.31

இந்துசமயஅறநிலையத்துறை சார்பில் நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் பூக்கடை வீதி பகுதியில் கடைகள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டு வந்தது இந்நி



லையில் கடைநடத்துவோர் மாதமாதம் பணம் செலுத்தவேண்டும். ஆனால் திருமலை என்பவருக்கு பலவருடங்களுக்கு முன்பு இந்துசமயஅறநிலையத்துறையினர் 3கடைகளை வாடகைக்கு விட்டனர்.

திருமலை 3கடைகளையும் உள்வாடகைக்கு விட்டுள்ளார் இந்நிலையில் கடந்த சுமார் 6 மாதத்திற்க்கு மேல் பலமாதமாகவே வாடகை செலுத்தாமல் நிலுவையில் வைத்துள்ளார்.

இதுபற்றி அதிகாரிகள் நேரில்சென்றும் தொலைபேசியிலும் கேட்டுள்ளனர் ஆனால் வடகை செலுத்தவில்லை இதனால் அதிகாரிகள் வழக்கு தொடர்ந்து பிடிவா ரண்டும் செய்தனர்.

ஆனால் இதுவரை ஏதும் வாடகை செலுத்தாத காரணத்தால் ரமேஸ் என்பரின் ஜுவல்லரி மற்றும் திருமலையின் 3கடைஉட்பட 4கடைகளுக்கு சீல்வைத்தனர். அப்போது உள்வாடகையில் இருந்தபெண்மணி இந்து சமயஅறநிலையத்துறை அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் பாதுகாப்பு பணியில் ஈடுட்டிருந்த காவல்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தியதில் சமரசம் ஏற்பட்டது. பரபரப்பாக காணப்படும் பூக்கடை வீதியில் 4கடைகளுக்கு சீல்வைத்ததால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



வீட்டுமனை பட்டா கோரி கலெக்டர் அலுவலகத்தில் பர்கூர் அருகே வசிக்கும் மலைவாழ் இருளர் இன மக்கள் மனு கொடுத்தனர்.


## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய சென்னை ராயப்பேட்டை யானைக்குளம் 1வது தெரு கதவு எண் 16,என்ற முகவரியில் வசித்து வரும் இராஜசேகரன் என்பவரின் முறையான தகவலின் பேரில் தெரிவிப்பது யாதெனில்....

எனது கட்சிக்காரர் நெல்லை மாவட்டம் ராதாபுரம் சார்பதிவகத்தில் 4291/2018 பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரம் சுமார் 4.33 சென்ட் சொத்தை அனுபவித்து வருகின்றார். மேற்படி சொத்தை ஈடுகெட்டி எனது கட்சிக்காரர் ஃபைவ் ஸ்டார் பைனான்ஸ் லிமிடெட் நிதி நிறுவனத்தில் கடன் கோரும்போது சொத்து சம்மந்தமான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. அப்போது தன் சொத்திற்கு சம்மந்தமான செட்டில்மென்ட் பத்திரத்தை எனது கட்சிக்காரர் ஜெராக்ஸ் எடுப்பதற்காக கடந்த 26/12/2025 அன்று பேருந்தில் ராதாபுரம் சென்ற போது அவரிடம் இருந்து சொத்திற்கு சம்மந்தமான மேற்படி ஆவணம் தொலைந்தது தெரியவந்தது. ஆகவே மேற்படி காணாமல் போன அசல் ஆவணத்தை எடுத்து தன் வசம் வைத்திருப்பவரோ அல்லது சொத்தின் பெயரில் யானுமே உரிமையோ, ஆட்சேபனையோ, பின் தொடர்ச்சியோ இருந்தாலோ நாளை முதல் 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். தவறும் பட்சத்தில் அதன்பின் வரும் எந்தவிதமான ஆட்சிசேபனையும் எனது கட்சிக்காரரை எந்த வில்லங்கத்திற்கும் கட்டுபடுத்தாது என்பதை இந்த பொதுஅறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**M. MARIA SINGAM .**

M. A. LLB , ADVOCATE/NOTARY PUBLIC
GO. Ms. No. 202/17, 2.No. 328/84
24, LAW CHAMBER, NAGERCOIL1




ஊத்தங்கரையில் கிருஷ்ணகிரி – திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலையில் வெங்காய லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது

## ஈரோடு கோட்டை கஸ்தூரி அரங்கநாதர் கோவிலில் திறக்கப்பட்ட சொர்க்கவாசல்!

ஈரோடு, டிச.31

ஈரோடு கோட்டை பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற கஸ்தூரி அரங்கநாதர் (பெருமாள்) கோவிலில், இந்த ஆண்டுக்கான வைகுண்ட ஏகாதசி விழா கடந்த 20ந் தேதி பகல்பத்து உற்சவத்துடன் வெகுவிமர்சையாகத் தொடங்கியது.

சிறப்பு அலங்காரம் மற்றும் திருமஞ்சனம் விழாவின் முக்கிய நிகழ்வாக, நேற்று முன்தினம் மாலை பெருமாள் மோகினி அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்குக் காட்சி அளித்தார். அதனைத் தொடர்ந்து, நேற்று அதிகாலை உற்சவ மூர்த்திக்கு சிறப்பு திருமஞ்சனம் நடைபெற்றது. இதில் பால், தயிர், இளநீர், பன்னீர் உள்ளிட்ட பல்வேறு நறுமணப்பொருட்கள்மற்றும்திரவியங்களால் அபிஷேகம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை காட்டப்பட்டது.

அபிஷேகத்திற்குப் பிறகு, ஸ்ரீதேவி மற்றும் பூதேவி சமேத பெருமாளுக்கு வண்ணமயமான மலர்களால் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டன. கோவிலின் பரமபத வாசல் (சொர்க்கவாசல்) பகுதியில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு, அதிகாலையில் கதவுகள் திறக்கப்பட்டன. சப்பரத்தில் எழுந்தரு



ளிய ஸ்ரீதேவி பூதேவி சமேத கஸ்தூரி அரங்கநாதரை, பக்தர்கள் தங்கள் தோள்களில் சுமந்து சொர்க்கவாசல் வழியாகக் கொண்டு சென்றனர். அப்போது அங்கிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் "கோவிந்தா... கோவிந்தா..." மற்றும் "கோவிந்தா... கோபாலா..." என பக்தி பரவசத்துடன் முழக்கமிட்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

அதிகாலை முதலே பக்தர்களின் வருகை அதிகரித்த வண்ணம் இருந்ததால், நீண்ட வரிசையில் காத்திருந்து பொதுமக்கள் பெருமாளை தரிசித்தனர். இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் மற்றும் தன்னார்வலர்கள் செய்திருந்தனர்.

## ஆம்பூர் அருகே விவசாய நிலத்தில் இருந்த 6 அடி நாகப்பாம்பு

### வனத்துறையினர் பத்திரமாக மீட்டு காப்பு காட்டில் விட்டனர்!!

ஆம்பூர். டிச.31

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மிட்டாளம் ஊராட்சி குட்டகந்தூர் கிராமத்தில் மனோகரன் என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் சுமார் 6 அடி நீளமுள்ள நாகப்பாம்பு குருவியை விழுங்கி நிலத்தில் உள்ள மரத்தின் கீழே பதுங்கி இருந்தது. இதனை பார்த்த மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த சென்ற வனத்துறையினர் நாகப்பாம்பை லாவகமாக பிடித்து அருகில் உள்ள காப்பு காட்டில் விட்டனர்.

